**உடுமலைப்பேட்டை நகராட்சி**

**02.2.2017 ம் தேதிய அவசரக்கூட்ட மன்ற நிரல்**

| Sl No | MCR No | Subjects in Agenda | Decision of the council |
|---|---|---|---|
| **1** | 520 | உள்ளாட்சி அமைப்புகளில் வார்டு மறுவரையறை மேற்கொள்வது தொடர்பான வழிமுறைகள் அட்டவணைகள் மற்றும் உத்தேச கால அட்டவணை (Tentative Schedule) ஆகியவைகளை அனுப்பி வார்டு மறுவரையறை செய்ய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்து வார்டு மறுவரையறை ஆணைய கடிதம் எண். 3174/17/EG1, நாள். 19.10.2017 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 23.10.2017ம் தேதிய 23617/16/எம்3, கடிதங்கள் வரப்பெற்றதன் அடிப்படையில் உடுமலைப்பேட்டை நகராட்சியில் 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படியும், வார்டில் உள்ள குடியிருப்புகளின் அடிப்படையிலும் வார்டு மறுவரையறை பணிகள் முடிக்கப்பட்டு ஒப்புதலுக்காக உத்தேச வரைபடங்கள் உரிய படிவங்களில் பூர்த்தி செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் திருப்பூர் அவர்கள் பரிந்துரையுடன் வார்டு மறுவறை ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருப்பூர் அவர்கள் மூலமாக உறுப்பினர் செயலர் வார்டு மறுவரையறை ஆணையம் சென்னை அவர்கள் அலுவலத்திற்கு அனுப்பப்பட்டது.<br>அதன் பேரில் பொதுமக்கள் மற்றும் அனைத்து உள்ளூர் கட்சி பிரமுகர்களிடம் இருந்து 12,01.2018க்குள் ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் பெற்று அதன் பேரிலும் மற்றும் அதன் தொடர்ச்சியாக நகராட்சி அலுவலகத்தில் அனைத்து கட்சி பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துகளின் அடிப்படையிலும் அதன் தொடர்ச்சியாக கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 01.02.2018 அன்று நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதன் பேரில் வார்டு எண்கள் 1, 2, 3, 4, 9, 10, 12, 15, 23, 32 ஆகியவைகளின் தொடர்புடைய அனைத்து படிவங்கள் மற்றும் வரைபடங்களில் திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு தயார் செய்யப்பட்ட தற்போதைய திருத்திய இறுதி வார்டு மறுவரையரை கருத்துருக்கள் மற்றும் வரைபடங்களுங்களுக்கு ஒப்புதல் வழங்கி வார்டு மறுவரையறை ஆணையத்திற்கு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>வார்டுகள் மறுவரையறை செய்வது தொடர்பாக பூர்த்தி செய்யப்பட்ட திருத்திய இறுதி படிவங்கள், வரைபடங்கள் மற்றும் கருத்துருக்களுக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.<br>**(ந.க. எண் 8854/2017/எப்1)** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |

(ஒப்பம்) கே. சரவணகுமார்
ஆணையாளர்(கூ.பொ) / தனி அலுவலர்

**மேலாளர்**
**உடுமலைப்பேட்டை நகராட்சி**

**20.2.2018 ம் தேதிய சாதாரணக்கூட்ட மன்ற நிரல்**

| Sl No | MCR No | Subjects in Agenda | Decision of the council |
|---|---|---|---|
| 1 | 521 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்களான 1) வாரச்சந்தையில் சுங்கம் வசூலிக்கும் உரிமம், 2) மத்திய பேருந்து நிலையம் உட்புறம் உள்ள கட்டணகழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம், 3) ராஜேந்திரா பாதை – பழனி பாதையில் உள்ள கட்டணகழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் 4) ராஜேந்திரா பாதையில் உள்ள ஆடடி சாலையில் சுங்கம் வசூலிக்கும் உரிமம் 5) நகராட்சி பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவுக்கட்டணம் வசூலிக்கும் உரிமம் மற்றும் 6) நகராட்சி எல்லைக்குள் சாலை ஓரங்களில் உள்ள புளிய மரங்கள் பலனை அனுபவிக்கும் உரிமம் 7) நகராட்சிக்கு சொந்தமான கங்காரதன் லே அவுட் மற்றும் பல்வேறு இடங்களில் பல்வகை மரங்களின் பலனை அனுபவிக்கும் உரிமம் மற்றும் 8) மத்திய பேருந்து நிலையத்தில் தட்டுக்களில் வைத்து ‘‘பூ’’ சுற்றி விற்பனை செய்யும் உரிமம் போன்ற இனங்களுக்கு 31.03.2018 உடன் குத்தகை உரிமம் முடிவுற்ற காரணத்தினால் புதிய குத்தகைதாரர்களுக்கு ஒப்பந்த உரிமம் வழங்குவதற்கு ஏதுவாக 30.01.2018 அன்று பொது ஏலம் / மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் உயர்ந்த பட்ச பொதுஏலம் / மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிய குத்தகைதாரர்களுக்கு குத்தகை உரிமம் அனுபவிக்க ஒப்புதல் வழங்கலாம்.<br>மேலும், வரிசை எண் 1ல் உள்ள வாரச்சந்தையில் சுங்கம் வசூலிக்கும் உரிமம் வரிசை எண் 4ல் உள்ள ராஜேந்திரா பாதையில் உள்ள ஆடடி சாலையில் சுங்கம் வசூலிக்கும் உரிமத்திற்கு ஏலம் கோரி எடுக்க யாரும் முன்வராத காரணத்தினால் அடுத்து வரும் வேலை நாட்களில் பொது ஏலம் விட நடவடிக்கை மேற்கொள்ளலாம்.<br>மேலும், வரிசை எண் 6ல் உள்ள நகராட்சி எல்லைக்குள் சாலை ஓரங்களில் உள்ள புளிய மரங்கள் மற்றும் வரிசை எண் 7ல் உள்ள நகராட்சிக்கு சொந்தமான கங்காரதன் லே அவுட் மற்றும் பல்வேறு இடங்களில் பல்வகை மரங்களின் பலனை அனுபவிக்கும் உரிமதிற்கு ஏலம் விடப்பட்டத்தில் சாலை ஓரங்களில் உள்ள புளிய மரங்களின் பலனை அனுபவிக்க உரிமம் கோரி முருகநாதன் என்பவர் மட்டும் கலந்து கொண்டார். மேலும், நகராட்சி சாலை விரிவாக்கப்பணிகளுக்கு இடையூராக இருந்த புளிய மரங்கள் அகற்றப்பட உள்ள நிலையில் மேற்படியாரும் ஏலத்தில் கலந்து கொள்ள விரும்பவில்லை. மேலும் நகராட்சிக்கு சொந்தமான கங்காரதன் லே அவுட் மற்றும் பல்வேறு இடங்களில் நகராட்சியின் குடிநீர் தேக்க தொட்டிகள் உள்ள காரணத்தினால் அவ்விடங்கள் பாதுகாக்கப்பட்ட பகுதிகளாக உள்ளது. எனவே, ஏல இனத்திலிருந்து மேற்படி இனத்தை நீக்கம் செய்ய மன்ற அனுமதி கோரலாம்.<br>வரிசை எண் 8ல் குறிப்பிட்டுள்ள மத்திய பேருந்து நிலையத்தில் தட்டுக்களில் வைத்து ‘‘பூ’’ சுற்றி விற்பனை செய்யும் உரிமத்திற்கு ஏலத்தில் இரண்டு நபர்கள் கலந்து கொண்டு ஏலம் கோரினர். 2015 – 2018ம் ஆண்டு ஏலம் கோரிய தொகையை விட தற்சமயம் குறைவான தொகையை ஏலக்கேள்வியாக கோரியதால் மறுஏலம் விட வேண்டி ஏலம் ஒத்தி வைக்கலாம்.<br>மேற்கண்ட விபரங்கள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கலாம்.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. ஏலம் போகாத இனங்களுக்கு அடுத்து வரும் வேலை நாட்களில் பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.<br>2. பொதுமக்களின் குடிநீர் தேவைக்கான குடிநீர் தேக்க தொட்டிகள் உள்ள பகுதிகள் பாதுகாக்கப்பட்ட இடங்களாக உள்ளதால் அன்னியர் நுழைவதை தடுக்க வேண்டி மரங்களை ஏலம் விடும் இனத்திலிருந்து நீக்கம் செய்யலாம்.<br>ந.க.எண்8510/2017/அ2 | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| **2** | 522 | உடுமலைப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமையும் அங்கீகரிக்கப்பட்ட இரசகாபாத் கிழக்கு விரிவு அபிவிருத்தி திட்டத்தில், அமையும் 'B2-B2' **50** அடி திட்ட சாலை கொழுமம் ரோடு முதல் இரயில் நிலையம் வரை இணைக்கும் சாலையாக அமைகின்றது. இச்சாலை அமைக்கும் பட்சத்தில் நகருக்குள் வந்து செல்லும் வாகனங்களால் ஏற்படும் போக்குவரத்து நெரிசல்களால் பொதுமக்களுக்கு மிகுந்த சிரமம் உண்டாகி வருகிறது. அதனை தவிர்க்க நடவடிக்கை மேற்கொண்டு அப்பகுதியில் உள்ள நில உரிமையாளர்களை அணுகியதன் பேரில் திரு..P.சுப்பிரமணியன், த/பெ. பொன்னியகவுண்டர் என்பவருக்கு சொந்தமான, நகரளவு வார்டு F, பிளாக் எண். **15**, நகராளவு எண். (T.S.No.) 31 Part, 35 Part, 36 Part, 47 Partல் அமையும் B2-B2' 50 அடி திட்ட சாலை , C-C' **40**அடி 'D9-D9' **30** அடி சாலைகள் மற்றும் நிலையில் **23** அடி அகல திட்ட சாலை ஆகியவைகளை பொதுமக்கள் நலன் கருதி, நகராட்சிக்கு சுமார் **56.70** சென்ட் பரப்பளவுள்ள இடத்தினை தானமாக ஒப்படைக்க முன்வந்து சம்மதம் தெரிவித்து கடிதம் கொடுத்துள்ளார்.<br>எனவே, பொதுமக்கள் நலன் கருதி இரசகாபாத் கிழக்கு விரிவு அபிவிருத்தி திட்டத்தில், அமையும் திட்ட சாலை பகுதிகளை தானமாக நகராட்சியின் பராமரிப்பிற்கு ஏற்றுக்கொள்ள மனுதாரர் சமர்ப்பித்துள்ள தான சாசன ஆவணம் ஒப்புதல் அளித்து சார்பதிவாளர் அலுவலகம் உடுமலைப்பேட்டையில் பத்திர பதிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :** பொதுமக்கள் நலன் கருதியும், போக்குவரத்து நெரிசல்களை தவிர்க்கும் பொருட்டும் திரு..P.சுப்பிரமணியன், த/பெ.பொன்னியகவுண்டர் அவர்களுக்கு சொந்தமான இடத்தில் அமையும் திட்டசாலை பகுதிகளை நகராட்சிக்கு தானமாக பெற்றுக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண் 680/2018/எப்1** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| **3** | 523 | உடுமலைப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமையும் அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் எண். **6**ல் அமையும் திருப்பூர் தாராபுரம் இணைக்கும் சாலை மின்சார வாரியத்திற்கு சொந்தமான வடபுற இடத்தில் மட்டும் மிகவும் குறுகலான சாலையாக அமைகின்றது. இச்சாலையில் பள்ளி கல்லூரி வாகனங்கள் அதிகளவில் சென்று வருவதால் வாகனங்களால் ஏற்படும் போக்குவரத்து நெரிசல்களால் பொதுமக்களுக்கு மிகுந்த சிரமம் உண்டாகி வருகிறது. அதனை தவிர்க்க நடவடிக்கை மேற்கொண்டு அப்பகுதியில் உள்ள நில உரிமையாளர்களை அணுகியதன் பேரில் அச்சாலையின் வடபுறம் அமைந்துள்ள நில உரிமையாளர்க**1.**திருமதி.C.N.உமாதேவி, **2.**திரு,C.N.கார்த்திகேயன் **3.**திரு.C.N.செல்வராஜலிங்கம் **4.**திருமதி. C.N.செந்தாமரை, **5.**திருமதி.கற்பகம் **6.**திரு.K.சிவக்குமார், **7.**திரு..K.சிதம்பரம், ஆகியோர்களுக்கு சொந்தமான, நகரளவு வார்டு B, பிளாக் எண். **6**, நகரளவு எண். (T.S.No.) 13ல் அமையும் இடத்தினை பொதுமக்கள் நலன் கருதி நகராட்சிக்கு சுமார் **5.8.**சென்ட் பரப்பளவுள்ள இடத்தினை தானமாக ஒப்படைக்க முன்வந்து சம்மதம் தெரிவித்து கடிதம் கொடுத்துள்ளார்.<br>எனவே, பொதுமக்கள் நலன் கருதி அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் எண். **6**ல் அமையும் திட்ட சாலை பகுதிகளை தானமாக நகராட்சியின் பராமரிப்பிற்கு ஏற்றுக்கொள்ள மனுதாரர் சமர்ப்பித்துள்ள தான சாசன ஆவணம் ஒப்புதல் அளித்து சார்பதிவாளர் அலுவலகம் உடுமலைப்பேட்டையில் பத்திர பதிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :** பொதுமக்கள் நலன் கருதியும், போக்குவரத்து நெரிசல்களை தவிர்க்கும் பொருட்டும் **1.** திருமதி. C.N.உமாதேவி, **2.** திரு,C.N.கார்த்திகேயன் **3.**திரு.C.N.செல்வராஜலிங்கம் **4.**திருமதி. C.N.செந்தாமரை, **5.**திருமதி. கற்பகம் **6.**திரு. K.சிவக்குமார், 7.திரு..K. சிதம்பரம், ஆகியோர்களுக்கு சொந்தமான இடத்தில் அமையும் இணைப்பு சாலை பகுதியை நகராட்சிக்கு தானமாக பெற்றுக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண் 681 / 2018 /எப்1** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |

<table>
<tr>
<td>4</td>
<td>524</td>
<td>உடுமலைப்பேட்டை நகராட்சியில் மத்திய பேருந்து நிலைய உட்புறம் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டணகழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு 2018 – 2021ம் ஆண்டிற்கான வருடாந்திர ஏலம் 30.01.2018 அன்று நடைபெற்றதில் கீழ்கண்ட பட்டியலில் உள்ள இரண்டு நபர்கள் மட்டும் கலந்து கொண்டு ஏலம் கோரியுள்ளனர்.
<table>
<tr><th>வ.எண்</th><th>பெயர்</th><th>கோரிய ஏலத்தொகை</th></tr>
<tr><td>1.</td><td>திருமதி. வி. சுமித்ரா</td><td>ரூ. 16,00,000</td></tr>
<tr><td>2.</td><td>திரு. எப். ஜெமேஷா</td><td>ரூ. 16,34,000</td></tr>
</table>
வரப்பெற்ற ஏலக்கேள்விகளில் வரிசை எண் 2ல் குறிப்பிட்டுள்ள திரு. எப். ஜெமேஷா என்பவரின் ஏலக்கேள்வி உயர்ந்தபட்சமாக உள்ளது. எனவே, ஏலக்கேள்வியினை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு:-</u><br>
மேற்காண் இனம் கடந்த மூன்றாண்டுகளுக்கு முன் 2015–2016 ஏலம் விடப்பட்டதில் ரூ.14,00,900/–க்கு ஏலம் விடப்பட்டு 2016 – 2017ம் ஆண்டுக்கு 5% உயர்வு செய்யப்பட்டு ரூ.14,70,945/– மற்றும் 2017 – 2018ம் ஆண்டுக்கு 5% உயர்வு செய்யப்பட்டு ரூ.15,44,493/–க்கும் ஏலம் விடப்பட்டது.<br>
தற்போது கோரப்பட்ட ஏலக்கேள்வி தொகையானது கடந்தாண்டை விட ரூ. 89,507/– கூடுதலாக உள்ளதால் தற்போது வரப் பெற்ற திரு. எப். ஜெமேஷா என்பவரின் ஏலக்கேள்வியை மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.<br>
ந.க. எண் 8510/2017/அ2</td>
<td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>5</td>
<td>525</td>
<td>உடுமலைப்பேட்டை நகராட்சியில் உள்ள மத்திய பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளுக்கு மட்டும் நுழைவுக்கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு 2018 – 2021ம் ஆண்டிற்கான வருடாந்திர ஏலம் 30.01.2018 அன்று நடைபெற்றதில் கீழ்கண்ட பட்டியலில் உள்ளவர் மட்டும் கலந்து கொண்டு ஏலம் கோரியுள்ளனர்.
<table>
<tr><th>வ.எண்</th><th>பெயர்</th><th>கோரிய ஏலத்தொகை</th></tr>
<tr><td>1.</td><td>திரு. ஆறுமுகம்</td><td>ரூ. 4,75,000</td></tr>
</table>
வரப்பெற்ற ஏலக்கேள்விகளில் வரிசை எண் 1ல் குறிப்பிட்டுள்ள திரு. ஆறுமுகம் என்பவரின் ஏலக்கேள்வி உயர்ந்தபட்சமாக உள்ளது. எனவே, ஏலக்கேள்வியினை முடிவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு:-</u><br>
மேற்காண் இனம் கடந்த மூன்றாண்'டுகளுக்கு முன் 2015–2016 ஏலம் விடப்பட்டதில் ரூ.3,17,780/–க்கு ஏலம் விடப்பட்டு 2016 – 2017ம் ஆண்டுக்கு 5% உயர்வு செய்யப்பட்டு ரூ.4,30,500/– மற்றும் 2017 – 2018ம் ஆண்டுக்கு 5% உயர்வு செய்யப்பட்டு ரூ.4,52,025/–க்கும் ஏலம் விடப்பட்டது.<br>
தற்போது கோரப்பட்ட ஏலக்கேள்வி தொகையானது கடந்தாண்டை விட ரூ. 22,975/– கூடுதலாக உள்ளதால் தற்போது வரப் பெற்ற திரு. ஆறுமுகம் என்பவரின் ஏலக்கேள்வியை மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.<br>
ந.க. எண் 8506/2017/அ2</td>
<td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>6</td>
<td>526</td>
<td>உடுமலைப்பேட்டை நகராட்சியில் ராஜேந்திரா பாதையில் உள்ள கட்டணகழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு 2018 – 2021ம் ஆண்டிற்கான வருடாந்திர ஏலம் 30.01.2018 அன்று நடைபெற்றதில் கீழ்கண்ட பட்டியலில் உள்ள இரண்டு நபர்கள் மட்டும் கலந்து கொண்டு ஏலம் கோரியுள்ளனர்.
<table>
<tr><th>வ.எண்</th><th>பெயர்</th><th>கோரிய ஏலத்தொகை</th></tr>
<tr><td>1.</td><td>திரு. டி. விஜயகுமார்</td><td>ரூ. 6,12,000</td></tr>
<tr><td>2.</td><td>திரு. டி. கணேசன்</td><td>ரூ. 6,00,000</td></tr>
</table></td>
<td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>வரப்பெற்ற ஏலக்கேள்விகளில் வரிசை எண் 1ல் குறிப்பிட்டுள்ள திரு. டி.விஜயகுமார் என்பவரின் ஏலக்கேள்வி உயர்ந்தபட்சமாக உள்ளது. எனவே, ஏலக்கேள்வியினை முடிவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:-<br>மேற்காண் இனம் கடந்த மூன்றாடுகளுக்கு முன் 2015–2016 ஏலம் விடப்பட்டதில் ரூ.5,26,500/–க்கு ஏலம் விடப்பட்டு 2016 – 2017ம் ஆண்டுக்கு 5% உயர்வு செய்யப்பட்டு ரூ.5,52,825/– மற்றும் 2017 – 2018ம் ஆண்டுக்கு 5% உயர்வு செய்யப்பட்டு ரூ.5,80,467/–க்கும் ஏலம் விடப்பட்டது.<br>தற்போது கோரப்பட்ட ஏலக்கேள்வி தொகையானது கடந்தாண்டை விட ரூ. 31,533/– கூடுதலாக உள்ளதால் தற்போது வரப் பெற்ற திரு. டி.விஜயகுமார் என்பவரின் ஏலக்கேள்வியை மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.<br>ந.க. எண் 8509/2017/அ2</td>
<td></td>
</tr>
<tr>
<td>7</td>
<td>527</td>
<td>உடுமலைப்பேட்டை நகராட்சியில் மத்திய பேருந்து நிலையத்தில் வெளிபுறம் உள்ள காலியிட கடை எண்கள் 5,6,10 மற்றும் 12க்கு 30.01.2018 தேதி பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கீழ்கண்டவாறு,
<table>
<tr><th rowspan="2">வ.எண்</th><th rowspan="2">ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரியவர் பெயர் மற்றும் விபரம்</th><th colspan="2">ஒரு மாத வாடகை ( ரூ.)</th></tr>
<tr><th>புதியது</th><th>பழையது</th></tr>
<tr><td>1.</td><td>திருமதி. எம். கவிதா<br>மத்திய பேருந்து நிலைய<br>காலியிடக்கடை எண் 10</td><td>ரூ.17600</td><td>ரூ.15100</td></tr>
<tr><td>2.</td><td>திரு. ராகுல்தேவ்<br>மத்திய பேருந்து நிலைய<br>காலியிடக்கடை எண் 12</td><td>ரூ.22100</td><td>ரூ.18100</td></tr>
<tr><td>3.</td><td>திருமதி. கே. சரோஜாதேவி<br>மத்திய பேருந்து நிலைய<br>காலியிடக்கடை எண் 12</td><td>ரூ.21500</td><td>ரூ.18100</td></tr>
</table>
மேற்கண்ட ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளிகளில் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கோரிய வரிசை எண் 1ல் உள்ள திருமதி. எம். கவிதா என்பவர் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியாக ரூ. 17,600/– கோரியுள்ளனர்.<br>மத்திய பேருந்து நிலைய காலியிடக்கடை எண் 12க்கு வரிசை எண் 2 மற்றும் 3ல் குறிப்பிடப்பட்டுள்ள ஏலதாரர்கள் கலந்து கொண்டனர். அதில் வரிசை எண் 2ல் குறிப்பிட்டுள்ள திரு. எம். ராகுல்தேவ் என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியாக ரூ. 22,100/– கோரியுள்ளார். மேலும் பட்டியலில் காண் ஏலதாரர்கள் கோரியுள்ள தொகை பழைய வாடகைக்கு அதிகமாக உள்ளது. எனவே, ஏலக்கேள்வியினை முடிவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:–<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மத்திய பேருந்து நிலையம் காலியிடக்கடைகள் 5 மற்றும் 6க்கு ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. வரிசை எண் 1 மற்றும் 2ல் குறிப்பிட்டுள்ள உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகையானது கடை எண் 10க்கு திருமதி. எம். கவிதா என்பவரின் ஏலக்கேள்வி தொகை ரூ.17,600/– யும், வரிசை எண் 2ல் குறிப்பிட்டுள்ள திரு. ராகுல்தேவ் என்பவரின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி ரூ. 22,100/– ம் ஏற்கனவே இருந்த வாடகையை விட அதிகமாக உள்ளது. மேலும் இதனால் நகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏதும் இல்லை. எனவே நகராட்சிக்கு கூடுதலாக வருவாய் வர உள்ளதால் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.<br>ந.க.எண் 10039/2017/அ2</td>
<td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>8</td>
<td>528</td>
<td>இந்நகராட்சிக்கு சொந்தமான ராஜேந்திரா ரோடு கடை எண் 26க்கு 06.02.2018ம் தேதி பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கீழ்கண்டவாறு,
<table>
<tr><th rowspan="2">வ.எண்</th><th rowspan="2">ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரியவர் பெயர் மற்றும் விபரம்</th><th colspan="2">ஒரு மாத வாடகை ( ரூ.)</th></tr>
<tr><th>புதியது</th><th>பழையது</th></tr>
<tr><td>1.</td><td>திரு. வி. ஜெயசிங்<br>ராஜேந்திரா ரோடு கடை எண் 26</td><td>ரூ.12050</td><td>ரூ.12000</td></tr>
</table>
மேற்கண்ட ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளிகளில் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரிய திரு. வி. ஜெயசிங் என்பவரின் ஏலக்கேள்வி ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இவர் கே5ாரியுள்ள தொகை பழைய வாடகைக்கு அதிகமாக உள்ளது.<br>
அலுவலகக்குறிப்பு:–<br>
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2. திரு. வி. ஜெயசிங் என்பவரது உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகையானது ஏற்கனவே இருந்த வாடகையை விட அதிகமாக உள்ளது. மேலும் இதனால் நகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏதும் இல்லை. எனவே நகராட்சிக்கு கூடுதலாக வருவாய் வர உள்ளதால் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.<br>
ந.க.எண் 874/2015/அ1</td>
<td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>9</td>
<td>529</td>
<td>உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு சொந்தமான பொறியாளர் பிரிவு ஈப்பு வாகனம் எண்.TN41V9604-ல் கிளட்ச் பிளேட், கிளட்ச் கவர் அசெம்பிள், கியர் பாக்ஸ் பெட் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள பழுதுகளை அங்கீகாரம் பெற்ற நிறுவனமான M/s.Guruvayurappan Automobiles, Udumalpet மூலம் சரிசெய்யவும் அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.11000–க்கு தனி அலுவலர், உடுமலைப்பேட்டை நகராட்சி அவர்களின் முன்அனுமதி பெற்று பணியின் அவசர அவசியம் கருதி மேல்நடவடிக்கை தொடரவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு:-</u> மன்றம் அனுமதி வழங்கலாம்<br>
ந.க. எண் 405/2018/இ2</td>
<td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>10</td>
<td>530</td>
<td>உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு சொந்தமான பொறியாளர் பிரிவு ஈப்பு வாகனம் எண்.TN41V9604-ல் கிளட்ச் பிளேட், கிளட்ச் கவர் அசெம்பிள், கியர் பாக்ஸ் பெட் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்யும் பணிக்கு தனி அலுவலரின், உடுமலைப்பேட்டை நகராட்சி அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து, அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளிலிருந்து விலைப்புள்ளி பெற்றதில் கீழ்க்கண்ட விபரப்படி மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>விலைப்புள்ளி கொடுத்த நிறுவனத்தின் பெயர்</th><th>விலைப்புள்ளி தொகை</th></tr>
<tr><td>1.</td><td>M/s.குருவாயூரப்பன் ஆட்டோ மொபைல்ஸ், உடுமலைப்பேட்டை</td><td>ரூ.11,000.00</td></tr>
<tr><td>2.</td><td>M/s.பி.பி ஷெரிப் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், பொள்ளாச்சி</td><td>ரூ.11,500.00</td></tr>
<tr><td>3.</td><td>M/s.ஜே.டி அன் கோ, பொள்ளாச்சி</td><td>ரூ.12,665.00</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு :</u><br>
1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ரூ.11000/–க்கு குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள M/s.குருவாயூரப்பன் ஆட்டோ மொபைல்ஸ், உடுமலைப்பேட்டை அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>
2. வாகன உபயோகத்தின் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்<br>
ந.க. எண் 405/2018/இ2</td>
<td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| **11** | 531 | உடுமலைப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமையும் மத்திய பேருந்து நிலையத்தின் தென்புறம் உள்ள பழனி பொள்ளாச்சி சாலை திண்டுக்கல் பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை ( NH-209) யை தற்போது நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தும் பணிகள் நடைபெற்று முடிவுறும் நிலையில் உள்ளது. இந்நிலையில் இச்சாலையில் கனரக மற்றும் மிதமான வாகனங்கள் அதிக அளவில் செல்வதால் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளது. அதனை தவிர்க்கும் விதமாகவும் பொதுமக்கள் நலன் கருதியும் மாற்று ஏற்பாடு செய்வதற்காக மாண்புமிகு பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு சி.மகேந்திரன், கோட்டப்பொறியாளர் தேசிய நெடுஞ்சாலை, நகராட்சி ஆணையாளர், போக்குவரத்து காவல் ஆய்வாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோர்களுடன் ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வு செய்யப்பட்டதில் மேற்படி இடத்தில் நடைபாதை மேம்பாலம் அமைக்க உத்தேசிக்கப்பட்டது. மேலும் இதனால் அப்பகுதியில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல்களால் பொதுமக்களுக்கு ஏற்படும் விபத்துக்கள் தவிர்க்கலாம் எனவும் முடிவு எடுக்கப்பட்டது.<br>எனவே இச்சாலையில் நடைபாதை மேம்பாலம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள சாலையின் வடபுறம் உள்ள பேருந்து நிலைய வெளிப்புற காலியிட கடை எண்கள்.5 மற்றும் 6 உள்ள இடம் இடையூறாக உள்ளதாக ஆய்வு கருத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி இடத்தில் அமையும் காலியிட கடை எண்கள் 5 மற்றும் 6ன் உரிமம் 31.03.2018 உடன் முடிவடைவதால் அக்கடைகளுக்கு பொது ஏலம் 31.01.2018 அன்று நடைபெற்றது. அதில் காலியிட கடை எண். 5 மற்றும் 6ற்கு ஏலம் கோர யாரும் முன்வரவில்லை. ஏற்கனவே மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் WPNo. 26385/2015, 26869/2015 27204/ 2015 ல் நடைபெற்ற வழக்கில் 31.03.2018ல் கடையை காலி செய்வதாக கடை எண். 5 மற்றும் 6ன் குத்தகைதாரர் திருமதி. S.ஜெயலட்சுமி என்பவர் பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளார். எனவே 01.04.2018ல் மேற்கண்ட கடைகளை காலி செய்து அப்புறப்படுத்தி மேற்கண்ட திட்டப்பணிக்கு இடத்தினை ஒதுக்கீடு செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>பொதுமக்கள் நலன் கருதி போக்குவரத்து நெரிசல்களை தவிர்த்து விபத்துக்கள் ஏற்படாமல் இருக்க காலியிட கடை எண்கள். 5 மற்றும் 6 கடைகளை காலி செய்து பணிகள் மேற்கொள்ள இடத்தினை ஒதுக்கீடு செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.516/2016/எப்1 | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| **12** | 532 | உடுமலைப்பேட்டை நகராட்சியில் உள்ள பிரசித்திபெற்ற உடுமலை மாரியம்மன் கோவில் தேர் உலாவரும் வீதிகளின் ஒன்றான சதாசிவம் வீதியானது சர்வே வார்டு பி, பிளாக் எண்.5, 6, மற்றும் 8 ஆகியவைகளில் அமைகிறது. இந்த வீதியானது பெரிய கடைவீதியில் இருந்து மேற்குபுறமாக நெல்லுகடைவீதி அடைந்து வடக்குபுறமாக சென்று பொள்ளாச்சி பழனி தேசிய நெடுஞ்சாலையை அடைகிறது. இதில், சதாசிவம் வீதி மட்டும் மிகவும் குறுகலாகவும் Zig Zag ஆக உள்ளதாலும் உடுமலை மாரியம்மன் கோவில் தேர் உலாவருவதற்கு மிகவும் இடையூறாக உள்ளது. எனவே, அச்சாலையை சீரமைப்பு செய்ய வேண்டியது மிகவும் அவசியமான ஒன்றாக அமைவதால் அச்சாலையை ஒட்டி அமையும் இட உரிமையாளர்கள் இனி வரும் காலங்களில் புதியதாக கட்டிடம் கட்டவோ நிலையில் உள்ள கட்டிடங்களில் திருத்தம் செய்து அபிவிருத்தி பணிகள் செய்வதற்கோ திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி கோரி விண்ணப்பிக்கும் பட்சத்தில் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இதை நடைமுறைபடுத்தும் விதமாக ஏற்கனவே திரு. M.ஜாபர் ஷெரீப், த/பெ. மகபூப் ஷெரீப் க.எண்.70, சதாசிவம் வீதி உடுமலைப்பேட்டை என்ற விலாசத்தில் உள்ள கட்டிடத்தில் கூடுதல் குடியிருப்பு கட்டிடம் கட்ட அனுமதி கோரி சமர்ப்பித்த விண்ணப்பம் க.ம.எண். 24/2017ல் சாலை சீரமைப்பு செய்ய வேண்டியுள்ள பகுதியினை கட்டிட வரைபடத்தில் குறிப்பிடப்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br>இந்நிலையில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 163,165, 166, 167, 168, 169, 170 ன்படி கட்டட வரிசைப்பாட்டையையும் வரையறுத்து சீரமைக்கும் அதிகாரம் நகரமன்றத்திற்கு உள்ளது. எனவே, பொதுமக்கள் நலன்கருதியும் குறுகலான வீதியால் தேரோட எவ்வித இடையூறும் இல்லாமல் அசாம்பாவிதம் ஏற்படாமல் இருக்க தவிர்க்கும் விதமாக மேற்கண்ட சட்டவிதிகளின்படி சாலையை சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | **அலுவலகக் குறிப்பு**<br>அனுமதிக்கலாம். பொதுமக்கள் நலன் கருதியும் தேரோடும் வீதியை சீரமைக்க வேண்டியும் மேற்கண்ட சட்ட விதிகளின்படி நடவடிக்கை மேற்கொண்டு சாலையை சீர்செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.516/2016/எப்1 | |
| **13** | 533 | உடுமலைப்பேட்டை நகராட்சி பகுதியில் அமையும் திண்டுக்கல் பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை (NH 209) பொள்ளாச்சி பழனி பாதையில் சாலை விரிவாக்கப் பணிகள் நடைபெறுவதில் சர்வே வார்டு பி, பிளாக் எண்.9ல் பெரும்பாலான இடங்கள் நகரளவு ஆவணங்களின்படி சர்க்கார் புறம்போக்கு என வகைப்பாடு செய்யப்பட்டு இன்றளவும் ஆவணங்களில் உள்ளது. இவைகளில் மேற்படி சாலையில் வடபுறம் உள்ள நகரளவு எண்கள்.114 115, 119, 118, 127, 128, 129, 130/1, 130/ 2 எண்களில் அமையும் இடங்கள் மட்டும் Road Alignmentற்கு மாறாக உள்ளது. மேலும், அப்பகுதியில் உள்ள இடத்தின் தற்போதைய உரிமையாளர்கள் அனுபோக பாத்தியத்தில் இருந்தவர்களிடம் கிரையம் பெற்று அதன் அடிப்படையில் பட்டா பெறப்பட்டு அனுபவித்து வருகிறார்கள். மேலும் அதில் புதியதாக கட்டிடம் கட்ட அனுமதி பெறப்பட்டதற்கு மாறகாவும் விதிமுறைகளுக்கு முரணாக அனுமதியின்றியும் வணிக உபயோக கட்டிடங்கள் தேசிய நெடுஞ்சாலை ஒட்டி கட்டிட வரம்பு விடப்படாமலும் தேவையான வாகன நிறுத்துமிடம் ஏற்படுத்தப்படாமலும் கட்டிடங்கள் கட்டப்பட்டு உள்ளது.<br>இந்நிலையில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 163,165, 166, 167, 168, 169, 170 ன்படி கட்டட வரிசைப்பாட்டையையும் வரையறுத்து சீரமைக்கும் அதிகாரம் நகரமன்றத்திற்கு உள்ளது. எனவே, பொதுமக்கள் நலன்கருதியும் தேசிய நெடுஞ்சாலையில் விபத்துக்கள் ஏற்பட்டு உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படாமல் இருக்க நடவடிக்கை மேற்கொள்ளும் விதமாக மேற்கண்ட சட்டவிதிகளின்படி சாலையை சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>அனுமதிக்கலாம். பொதுமக்கள் நலன் கருதியும் மேற்கண்ட சட்ட விதிகளின்படி சாலையில் Zig Zag ஆக உள்ள கட்டிடங்களை சீரமைத்து சாலையை சீர்செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.516/2016/எப்1 | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| **14** | 534 | உடுமலைப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியானது 1917ம் ஆண்டு அரசு ஆணை எண். 1527 நாள்.01.01.1918 ம் ஆண்டு மூன்றாம் நிலை நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டு 1987ம் ஆண்டு சிறப்புநிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு பணியாற்றி வருவதில் தற்போது 100 ஆண்டு காலம் நிறைவடைந்துள்ள நிலையில் வளர்ந்து வரும் நகராட்சியில் மக்கள் தொகை பெருக்கத்தால் போக்குவரத்து நெரிசல் அதிகமாகியும் சாலைகளில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு வருகிறது. இதனால் பொதுமக்கள் மிகவும் சிரமம்பட்டு வருகின்றனர்.<br>இந்நிலையில் நகர வளர்ச்சியை கருத்தில் கொண்டு நகர் ஊரமைப்பு துறையின் மூலம் நகராட்சி பகுதியில் உள்ள இடங்களின் பயன்பாடுகளின் அடிப்படையில் முழுமைத்திட்டம் தயார் செய்து அரசாணை எண். 133 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள். 07.02.1990 ன்படி அங்கீகரிக்கப்பட்டது. மேலும், அதனடிப்படையில் 13 பகுதிகளாக பிரிக்கப்பட்டு விரிவு அபிவிருத்தித்திட்டங்கள் தயார் செய்து நகர வளர்ச்சி வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது. இதில், விரிவு அபிவிருத்தித் திட்டம் எண்கள். 3,5, 6, 7, 8ஆகியவைகளில் நீர் நிலை ஓடைகளான கழுத்தறுத்தான் பள்ளம் ஓடை மற்றும் தங்கம்மயீள் ஓடை ஆகியவைகள் செல்கின்றது. இதன் அமைப்பு வரைபடங்கள் மற்றும் விபரங்கள் மேற்கண்ட திட்டங்களில் வரைபடங்கள் மற்றும் விபரங்கள் பட்டியலிடப்பட்டுள்ளது. மே.ற்க.ண்ட ஓடைகளின் நீர்வழி தடங்களில் தற்போது ஆக்கிரமிப்பு செய்து வருவதாலும் நகரில் மையப்பகுதியில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல்களில் சீர்செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமான ஒன்றாகும். எனவே, நகர் ஊரமைப்பு துறையால் தயார் செய்து அங்கீகரிக்கப்பட்ட முழுமைத் திட்டம் விரிவு அபிவிருத்தித் திட்டங்களிலும் உள்ள நிலவியல் ஓடைகளான தங்கம்மாள் ஓடை மற்றும் கழுத்தறுத்தான் பள்ளம் ஆகியவைகளின் மையப்பகுதியில் நீர்வழி தடங்கள் அமைத்தும் இருபுறங்களிலும் | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | Service Road அமைத்தும் பொதுமக்களின் போக்குவரத்து சிரமங்களை குறைக்க நடவடிக்கை எடுக்கும் வகையில் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகைகளை நகர் ஊரமைப்பு துறையின் மூலம் உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிக் கட்டண நிதியிலிருந்து வழங்கி உத்திரவிட நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>அனுமதிக்கலாம். பொதுமக்கள் நலன் கருதி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் மூலம் தேவையான நிதியினை பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.516/2016/எப்1 | |
| **15** | 535 | உடுமலைப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான வார்டு எண்கள். 30, 31, 32ல் உள்ள பொதுமக்கள் நூலக வசதி அப்பகுதியில் அமைத்துதர கோரி மனு கொடுத்துள்ளார்கள். அதன்பேரில் ஆய்வு செய்யப்பட்டதில் தற்போதைய நகராட்சி வார்டு எண். 30 ல் உள்ள சர்வே வார்டு E, பிளாக் எண். 8, நகரளவு எண். 113ல் அமையும் சுமார் 1775.50 சமீ பரப்பளவுள்ள காலி இடம் நகரளவு ஆவணங்களின்படி ஆணையாளர் உடுமலைப்பேட்டை நகராட்சி (Community Hall) என்ற பெயரில் தாக்கலாகியுள்ளது. மேலும், மேற்கண்ட இடம் நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் எண். 2ல் Community Hall ஆகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி இடத்தில் ஏதும் ஆக்கிரமிப்புகள் ஏற்படாமல் இருக்கும் பொருட்டும், பொதுமக்கள் மற்றும் அப்பகுதியில் உள்ள பள்ளி கல்லூரி மாணவ மாணவிகள் பயன்பெறும் வகையிலும் அரசு பணிக்குண்டான குரூப் தேர்விற்கு படிக்கும் வகையிலும் மேற்கண்ட இடத்தின் ஒரு பகுதியில் பொது நூலகம் அமைத்து தரும் பட்சத்தில் மிகவும் பயனுள்ளதாக அமையும், எனவே அப்பகுதியில் பொதுநூலகம் அமைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :** பொதுமக்கள் நலன் கருதியும், பள்ளி மாணவ மாணவியர்கள் நலன் கருதியும் மேற்காண் நகராட்சிக்கு சொந்தமான இடத்தின் ஒரு பகுதியில் பொது நூலகம் அமைக்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 507 /2018/எப்1** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| **16** | 536 | உடுமலைப்பேட்டை நகராட்சி, எல்லைக்குட்பட்ட பகுதியான வார்டு பி, பிளாக் எண்.25, நகரளவு எண். 1 /6.க.ச.எண்,121/1B, 125/Bல் உள்ள ஓடை பகுதியில் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகவும் அதனை அகற்ற கோரியும் பொதுமக்கள் நலன் கருதியும் மேற்கண்ட ஓடையில் இயற்கை இடர்பாடுகளால் பருவமழை காலங்களில் ஏற்படும் வெள்ள பெருக்கால் உயிர்ச்சேதம் ஏற்படாமல் இருப்பதை தடுக்கும் விதமாக ஏற்கனவே நிலையில் இருந்தாவாறு 80 அடி அகல ஓடையை நிலைநிறுத்த திரு. ஆர்.கண்ணன் என்பவரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No.28194 /2017ல் நகராட்சி மீது வழக்கு தொடரப்பட்டது.<br>மேற்படி வழக்கினை அவசர அவசியதை முன்னிட்டு நகராட்சி சார்பில் எதிர் வழக்காடியதற்கும், வழக்கினை சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.B.ஆனந்த் அவர்கள் மூலம் நடத்தியதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>அனுமதிக்கலாம். மேலும், அவசர அவசியத்தை மேற்படி வழக்கினை நடத்தியதற்கும் வழக்கின் செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 5926 /2016/எப்1** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| **17** | 537 | உடுமலைப்பேட்டை நகராட்சி தோற்றுவிக்கப்பட்டு 100 ஆண்டு காலம் ஆகின்ற நிலையில் தற்போது நிலையில் உள்ள அலுவலக வளாகத்தில் புதிய அலுவலகக் கட்டிடம் அரசின் நிதி பெற்ற கட்டப்பட்டு தற்போது பயன்பாட்டிற்காக கொண்டுவர உள்ளதால் ஏற்கனவே பயன்பாட்டில் நல்ல நிலையில் இருந்து வரும் பாரம்பரியமிக்க தாகூர் மாளிகை அலுவலகக் கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தாமல் பராமரிக்கப்பட வேண்டியது அவசியமான ஒன்றாகும். எனவே, தற்போது செயல்பட்டு வரும் நகராட்சி அலுவலகம் | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | முன்புறம் உள்ள கணினி வசூல் மையம் முன்புறம் உள்ள காலியிடம் மற்றும் ஆணையாளர் அறை, நகர்மன்ற தலைவர் அறை, பொறியாளர் பிரிவு, உள்ளடக்கிய கட்டிடம், சுகாதாரப்பிரிவு அறை, கருவூலக அறை மற்றும் ஆவணகாப்பக அறை உள்ளடக்கிய கட்டிடங்களை 1 முதல் 10 வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவ மாணவிகளுக்கு அறிவுத்திறனை ஊக்குவித்து வளர்த்தும் வகையில் அறிவியியல் நூலகம் மற்றும் கணனி மென்பொருள் பூங்காவாக பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளலாம். மேலும், மாணவ, மாணவிகளின் உடல்நலம் மற்றும் சிந்திக்கும் திறனை வளர்த்துகின்ற வகையிலே உள்விளையாட்டு அரங்கமாகவே பயன்படுத்தப்பட வேண்டும்.<br>இவைகள் அல்லாமல் வணிக நோக்கத்திலோ, வேறு உபயோகத்திற்காகவோ அல்லது வேறு துறைகளுக்கு வாடகைக்கு விடுதலோ போன்ற செயல்கள் செய்யக்கூடாது எனவும் தீர்மானிக்கப்பட்டது. மேலும், இப்பயன்பாட்டிற்காக தவிர்த்து வேறு பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்த வேண்டும் எனில் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் வாயிலாக அரசின் அனுமதி பெறப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. மேற்கண்ட தகவல்கள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :–**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.461 /2016/எப்1** | |

(ஒப்பம்) கே. சரவணகுமார்
ஆணையாளர்(கூ.பொ) / தனி அலுவலர்

**ஆணையாளர்(பொ)**
**உடுமலைப்பேட்டை நகராட்சி**